Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.232/2014

**P.W**. 3(LW5)

| | |
|---|---|
| Name | : திரு.முருகன் |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026

மனுவின் பேரில் திரு.முருகன் காவல் உதவி ஆய்வாளர் இந்த வழக்கில் கூடுதல் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாமல்லபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான சாரதி காவல் ஆய்வாளரின் கையெழுத்தும் கையொப்பமும் நன்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 18.09.2013ம் தேதி மாலை 5.30 மணியளவில் மாமல்லபுரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக திரு.சாரதி நிலைய பொறுப்பில் இருந்தபோது முனியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதனடிப்படையில் நிலைய குற்ற எண்.413/2013 சட்டப்பிரிவுகள்

3, 4, 5 ITP Act –ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். **(புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின் அவர் சாட்சிகள் புகார்தாரர் முனியன் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான போலிஸ் சாட்சிகள் தலைமை காவலர் 1533 ரமேஷ், மற்றும் தலைமை காவலர் 670 செந்தமிழ்செல்வன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

4. பின் இவ்வழக்கின் எதிரிகளான சண்முகம், சுப்பிரமணி ஆகியோர்களை 18.09.2013 அன்று மாமல்லபுரம் கோட்டீஸ்வரா லாட்ஜில் கைது செய்து எதிரி சுப்பிரமணி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். பின்னர் இந்த வழக்கின் வழக்கு சொத்தான ஆணுறைகள் 3 எண்ணிக்கைகள் கைப்பற்றி போலிஸ் சாட்சிகள் தலைமை காவலர் 1533 ரமேஷ், மற்றும் தலைமை காவலர் 670 செந்தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். **(படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான ஆணுறைகள் 3 எண்ணிக்கைகள் அ.சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது)**. எதிரிகளை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினார்.

5. வழக்கின் எதிரியான சுப்பிரமணி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பாதிக்கப்பட்ட பெண்கள் காமாட்சி மற்றும் கலைவாணி ஆகியோர்களை மீட்டு அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அரசு பெண்கள் கூர்நோக்கு இல்லம் மைலாப்பூரில் ஒப்படைத்தார்.

6. இத்துடன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 3, 4, 5 ITP Act –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். அவரது விசாரணையில் அ.சா.1 வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,**

சம்பவ இடமானது பகல் நேரம் என்பதால் பொது மக்கள் அதிகம் வந்து போகும் இடம் என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி சுப்பிரமணி தாமாக முன் வந்து எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. பாதிக்கப்பட்ட பெண்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 னிடமிருந்து விசாரணை அதிகாரி புகார் எதையும் பெறவில்லை என்றாலும் சாட்சிகளை அவர் சரிவர விசாரணை செய்ய வில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து வழக்குக்கு ஏதுவாக தயார் செய்யப்பட்டுள்ளன என்றாலும் வழக்கிற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.